0037

**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**கல்விப்பீடம்**

**விசேட தேவைகள் கல்வியில் கல்விமாணி சிறப்பு நிகழ்ச்சித்திட்டம் - 2025/2026**

**இறுதிப்பரீட்சை- 2026**

**மட்டம் - 06**

**SNU6620– விசேட தேவைகள் சார் கல்விக்கான கல்வித் தொழில்நுட்பம்**

**காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்**

---

**திகதி:-26.06.2026** **நேரம்: மு.ப 09.30 - பி.ப 12.30**

---

**பகுதி I இல் சகல வினாக்களுக்கும், பகுதி II இலிருந்து எவையேனும் இரண்டு (02) வினாக்களுக்கும், பகுதி III இலிருந்து எவையேனும் இரண்டு (02) வினாக்களுக்கும் விடை எழுதுக.**

## பகுதி - I

1.

i. கல்வித் தொழில்நுட்பம் என்ற பதத்தை வரையறுத்து, கற்பித்தல் - கற்றல் செயல்பாட்டில் கல்வித் தொழில்நுட்பத்தின் **ஐந்து (05)** வகிபங்குகளைக் குறிப்பிடுக.

ii. கற்பித்தல் - கற்றல் செயன்முறையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை (ICT) ஒருங்கிணைக்கும் போது ஒரு ஆசிரியர் கருத்திற் கொள்ள வேண்டிய **ஐந்து (05)** அம்சங்களைக் குறிப்பிடுக.

iii. குழந்தை – மைய வகுப்பறையில் கற்றலை எளிதாக்குபவராக ஆசிரியரின் பண்பியல்புகள் **ஐந்தினைச் (05)** சுருக்கமாக விளக்குக.

iv. விசேட கல்விப் பிரிவில் கற்பித்தல் - கற்றல் செயல்பாட்டில் ‘கிளைவழி திட்டமிடப்பட்ட கற்றல்’ (Branching programmed learning) முறையைப் பயன்படுத்துவதன் நன்மைகள் **ஐந்தினைக் (05)** குறிப்பிடுக.

v. உள்ளடங்கல் வகுப்பறையில் ஒரு கற்பித்தல் - கற்றல் முறையாகக் குழு கற்பித்தலின் (Group Teaching) **ஐந்து (05)** நன்மைகளைக் குறிப்பிடுக.

vi. உள்ளடங்கல் வகுப்பறைக் கற்பித்தலில் கற்றல் துணைச்சாதனங்களைப் பயன்படுத்துவதன் **ஐந்து (05)** நன்மைகளைச் சுருக்கமாக விளக்குக.

vii. உள்ளடங்கல் வகுப்பறைக் கற்பித்தல் - கற்றல் செயல்பாட்டில் ஒரு பாடத்தைத் திட்டமிடும் போது கருத்திற் கொள்ள வேண்டிய **ஐந்து (05)** காரணிகளைக் குறிப்பிடுக.

viii. விசேட கல்வித் தேவைகள் உள்ள மாணவர்களுக்கு உதவியளிப்பதில் உதவி தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை விளக்குக.

**(08 x 05 = 40 புள்ளிகள்)**

## பகுதி –II

**இரண்டு (02) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

2. அ. இலங்கைக் கல்வியில் புதிய தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதில் ஆசிரியரின் பங்கை விளக்குக. **(07 புள்ளிகள்)**

ஆ. நவீன கல்வி முறையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் தாக்கத்தை, விசேட கல்வியின் பொருத்தமான எடுத்துக்காட்டுக்களுடன் ஆராய்க. **(08 புள்ளிகள்)**

3. **அ.** தரம் - 5 உள்ளடங்கல் வகுப்பறையில் பாடமொன்றைக் கற்பிப்பதற்கு ஏற்ற ஒரு செயல்திட்டத்தை உருவாக்குங்கள். உங்கள் விடையில், செயல்திட்டத்தின் வகை, குறிப்பிட்ட செயல்திட்ட வகையைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணம் மற்றும் செயல்திட்டத்தில் உள்ள படிகள் ஆகியவற்றை உள்ளடக்குக.

**(07 புள்ளிகள்)**

**ஆ.** விரிவுரை முறை, கண்டறிதல் முறை மற்றும் பிரச்சனை தீர்க்கும் முறை ஆகியவற்றை வேறுபடுத்தி, ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான எடுத்துக்காட்டுக்களை வழங்குக. **(08 புள்ளிகள்)**

4. **அ.** உள்ளடங்கல் வகுப்பறைகளில் வெவ்வேறு கற்பித்தல் நுட்பங்களைப் பயன்படுத்துவதன் நன்மைகளை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக. **(07 புள்ளிகள்)**

**ஆ.** நீங்கள் செவித்திறன் குறைபாடுள்ள ஒரு மாணவனுக்கு கற்பிக்கும் ஆசிரியர் என்று கற்பனை செய்து கொள்ளுங்கள். குறிப்பிட்ட வகுப்பறைக்கான பாடத்திட்டங்களைத் தயாரிப்பதில் கருத்தில் கொள்ள வேண்டிய குறைந்தது **ஐந்து (05)** முக்கியமான காரணிகளை விவரிக்குக. **(08புள்ளிகள்)**

5. **அ.** அனைத்து கற்பவர்களுக்கும் உதவியளிக்கும் வகையில், கற்றல் துணைக்கருவிகளை எவ்வாறு திறம்படத் தேர்ந்தெடுத்து, தயாரித்து, பயன்படுத்தலாம் என்பதை விளக்குக. **(07 புள்ளிகள்)**

**ஆ.** உள்ளடங்கல் வகுப்பறை ஆசிரியர் என்ற முறையில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பாடம் மற்றும் தலைப்பிற்கான பாடத்திட்டங்களை வடிவமைக்க, கற்றலுக்கான உலகளாவிய வடிவமைப்பு (UDL) கட்டமைப்பை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை விளக்குக. **(08புள்ளிகள்)**

## பகுதி –III

**இரண்டு (02) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

6. **அ.** ஒரு விசேட கல்விப் பிரிவில் இயலாமையுள்ள மாணவர்களின் கற்பித்தல் - கற்றல் செயல்பாட்டில் உதவி தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக. **(07புள்ளிகள்)**

**ஆ.** தாழ் தொழில்நுட்பம், இடைநிலைத் தொழில்நுட்பம் மற்றும் உயர் தொழில்நுட்ப உதவிக் கருவிகள் அல்லது சாதனங்களை, ஒவ்வொரு வகைக்கும் **மூன்று (03)** எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்குக. இந்த உதவி தொழில்நுட்பங்கள் வெவ்வேறு வகை இயலாமையின் விளைவுகளை எவ்வாறு மேம்படுத்துகின்றன என்பதை விளக்குக. **(08புள்ளிகள்)**

7. நீங்கள் ஒரு உள்ளடங்கல் பாடசாலையில் விசேட கல்வி ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளீர்கள்.

**அ.** விசேட கல்வித் தேவைகள் உள்ள கற்பவர்களின் மாறுபட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கலைத்திட்ட தழுவலின் முக்கியத்துவத்தை ஆராய்க. **(07 புள்ளிகள்)**

**ஆ.** விசேட தேவைகள் உள்ள பிள்ளைகளிடையே திறம்பட்ட கற்றலை ஊக்குவிக்க உங்கள் வகுப்பில் நீங்கள் பயன்படுத்தும் உத்திகளை விவரித்து, ஒவ்வொரு உத்தியின் தேர்வையும் நியாயப்படுத்துக. **(08 புள்ளிகள்)**

8. **அ.** இயலாமையுடைய மாணவர்களுக்கான தனியாள் மையக் கல்வித் திட்டதிதை (IEP) உருவாக்கும் செயல்முறையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக. **(07 புள்ளிகள்)**

**ஆ.** 'இயலாமையுடைய மாணவர்களின் முழுமையான விருத்திக்குத் தனியாள் மையக் கல்வித்திட்டம் இன்றியமையாதது. இது ஒவ்வொரு மாணவரின் தனிப்பட்ட பலங்கள், தேவைகள் மற்றும் இலக்குகளைக் கருத்தில் கொண்டு, கல்விக்கு ஒரு கட்டமைக்கப்பட்ட மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட அணுகுமுறையை வழங்குகிறது.' இந்தக் கூற்றை நியாயப்படுத்துக. **(08புள்ளிகள்)**

9. **அ.** விசேட கல்வித் தேவைகள் உள்ள மாணவர்களின் நோக்கில் இணையவழிக் கற்றலின் சாதக பாதக அம்சங்களை விளக்குக. **(07 புள்ளிகள்)**

**ஆ.** ஒரு ஆசிரியராக, விசேட கல்வித் தேவைகள் உள்ள மாணவர்கள் இணையவழிக் கற்றலால் அனுபவிக்கும் பாதகமான தாக்கங்களைக் குறைக்க எவ்வகையான உத்திகளைச் செயல்படுத்தலாம்? **(08 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -